# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KANNIYAKUMARI AT NAGERCOIL.

19.09.2025

O.S. No. 291/2022

D.W. 1 திருமதி. மெர்சி ஜாக்குலின்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) -**

1 ஆம் பிரதிவாதியான எனது தாயார் என்னுடன் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அவர் நல்ல மனநிலையிலும், உடல் நிலையிலும் ஆரோக்கியமாகதான் இருக்கிறார் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.ஏ., பி.எட். படித்துள்ளேன். தமிழ், ஆங்கிலம் எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். நீலகிரி மாவட்டம் குன்னூரில் எத்தனை வருடங்களாக வசிக்கிறேன் என்றால் 35 வருடங்களாக வசிக்கிறேன். எனக்கு திருமணம் ஆனதிலிருந்து அங்கு இருக்கிறேன் என்றால் ஆமாம். எனது திருமணம் பெற்றோரால் பார்த்து செய்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு போட்டோ மற்றும் வீடியோ எடுக்கப்பட்டதா என்றால் போட்டோ எடுத்தார்கள், வீடியோ எடுக்கவில்லை. அந்த போட்டோக்களை பார்த்தால் எனது திருமணம் நல்ல ஆடம்பரமான முறையில் செய்யப்பட்டது என்பது தெரியவரும் என்பதால்தான் அந்த போட்டோக்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல. இந்த மாவட்டத்தில் சீதனம் கொடுக்கமால் திருமணம் செய்து வைக்கும் முறை கிடையாது என்றாலும் அதுவும் எனக்கு திருமணம் செய்த கால கட்டத்தில் சீதனம் கொடுக்காமல் திருமணம் நடக்காது என்றாலும் சரியல்ல, எனது கணவர் வீட்டில் வரதட்சனை வாங்கவில்லை. அவ்வாறு நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் என்ன படித்திருந்தார் என்றால் பி.யூ.சி படித்திருந்தார். எனது அப்பா இருந்த கால கட்டத்தில் எவ்வளவு சொத்து வைத்திருந்தால் என்றால் அது எனக்கு தெரியாது. சுமார் 10 ஏக்கருக்கு மேல் விவசாயம் செய்து வந்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனது குடும்பத்தின் பிரதான வருமானம் விவசாயம்தான் என்றாலும் அது என் அப்பாதான் பார்த்து வந்தார் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 7 ல் குறிப்பிடப்பட்டுள்ள 1 ஆம் பிரதிவாதிக்கு எழுதிய 1961 ஆம் வருடத்திய ஆவணம் எழுதப்பட்டபோது எனக்கு வயது என்ன என்றால் அப்போது நான் பிறக்கவில்லை. அதனால் அந்த ஆவணம் யாரால் எப்படி எந்த சூழ்நிலையில் எதற்காக எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். எனது அம்மாவுக்கும், அப்பாவுக்கும் திருமணம் நடந்த சமயத்தில் அந்த சொத்துக்கள் அடமானத்திலிருந்து கடன் கொடுத்தவர்கள் அந்த சொத்தை எழுதி கொடுக்க சொல்லி, நிர்பந்தம் செய்து வந்தார்கள். அப்போது எனது அம்மா வேலை பார்த்து வந்தார். அவரிடமிருந்த பணம், நகை ஆகியவற்றை வைத்து அந்த சொத்தை அடமானத்திலிருந்து மீட்டார். அதனால் எனது அப்பா அந்த சொத்தை எனது

அம்மாவின் பெயரில் எழுதி வைத்தார். இந்த விவரங்கள் அனைத்தும் என் அம்மா என்னிடம் சொல்லியிருந்தார். நான் தற்போது சொன்ன இந்த விவரங்கள் அனைத்தும் உண்மையாக இருந்திருந்தால் என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலேயே சொல்லியிருப்பேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி விவரங்கள் உண்மையாக இருந்திருந்தால் அது சம்பந்தமான ஆவணங்களையும் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் பொய் என்பதால்தான் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அந்த கால கட்டத்தில் நான் பிறக்கவில்லை என்பதால் அந்த ஆவணங்கள் குறித்து கூறுவதற்கு எனக்கு அருகதை இல்லை என்றாலும் எனது தாயார்தான் சொல்ல முடியும் என்றாலும் தேவைப்பட்டால் அம்மா சாட்சியம் அளிப்பார். எனது தாயார் நேரில் வந்தால் எனக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கமாட்டார் என்பதற்காக அவரை தடுத்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல, அவருக்கு 90 வயது. குன்னூரிலிருந்து அடிக்கடி வரமுடியாது. வழக்கு சொத்தில்தான் வாதியும், அவருடைய குடும்பத்தினரும் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அவரை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற எந்த நடவடிக்கையும் நாங்கள் எடுக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுத்தோம், வீட்டிற்கு போனோல் சுட்டுவிடுவோம் என்றார். அவரிடம் கன் இருக்கிறது. வழக்கு எதுவும் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. இந்த வழக்கு முடிவதற்காக காத்திருக்கிறோம். இந்த வழக்கு முடிந்தவுடன் அவரை வெளியேற்ற நினைத்துள்ளோமா என்றால் ஆமாம்.

பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தில் ஜோசப் ஐயப்ப பிள்ளை என்பவரின் பெயர்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்துபோனவரின் பெயரை குறிப்பிட்டுள்ளார். அதில் குறிப்பிட்டுள்ள நபர் எனது அப்பா கிடையாது என்றாலும் சம்பந்தமில்லாத ஒரு ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சர்ச்சில் அவர் பெயர் ஜோசப், சான்றிதழ்களில் ஐயப்பபிள்ளை. அதனால் ஜோசப் ஐயப்பபிள்ளை என குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ அல்லது எந்த ஆவணத்திலோ அவ்வாறு குறிப்பிடவில்லை என்றாலும் வழக்கிற்காக தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பி.வா.சாஆ. 5 ஆவணத்தில் GST, TIN, Serial Number குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 5 அவணத்தை யாரும் எந்த டைப்பிங் சென்டரிலும் உருவாக்கலாம் என்றாலும் அவ்வாறு இந்த ஆவணத்தை வழக்கிற்காக தயார் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. எனது அப்பா எந்த ஆண்டில் இறந்தார் என்றால் 22.05.2016 ல் இறந்தார். 13.03.2017 என்று பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தில் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கல்லறை உடனே கட்டமாட்டார்கள் ஒரு வருடத்திற்குள் கட்டுவார்கள். இதுவும் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் அவ்வாறு தேதி உள்ளது. கிறிஸ்தவ முறைப்படி இறந்த நாளிலிருந்து 4 நாட்களில் கல்லறை கட்டி விஷேசமும் முடித்துவிடுவார்கள் என்றால் சரியல்ல. மூன்றாவது நாள் மண் குவித்து வைப்போம். கல்லறை கட்ட மாட்டோம். எனது அப்பா இறக்கும் தருவாயில் நான் குன்னூரில் இருந்தேன்

என்றாலும் வாதிதான் அனைத்து காரியங்களும் செய்து, செலவுகளும் செய்தார் என்றாலும் தவறாக பயன்படுத்தி தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ. 2 ஆவணத்தில் குறிப்புரை என்ற இடத்தில் 08.08.2022 என தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 2 ஆவணத்தில் அச்சடிக்கப்பட்ட தேதி 06.09.2022 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கும், வாதிக்கும் பிரச்சினை ஏற்பட்டு வழக்கறிவிப்புகள் கொடுக்கப்பட்டபிறகு அந்த ஆவணத்தை வழக்கிற்காக உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 3 ஆவணத்தில் பலவகை ரசீது என தலைப்பு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதிலும் தேதி 08.12.2022 என உள்ளது என்றால் ஆமாம். அது நான் கட்டிய தேதி. இந்த ஆவணத்திற்கும், வழக்கு சொத்திற்கும் தொடர்பு கிடையாது என்றாலும் கொடிநாளுக்காக தொகை செலுத்தினாலும் அவ்வாறுதான் ரசீது கொடுப்பார்கள் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எல்லா ஆவணங்களும் 2022 ஆண்டிற்கு பிறகு ஏற்பட்டது என்றாலும் அதற்கு முன்பான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் 1961 ல் எனது அம்மா பெயரில் ஏற்பட்ட செற்றில்மெண்ட் ஆவணத்தை தவிர, மற்ற ஆவணங்கள் அனைத்தும் 2022 மற்றும் அத ற்கு பிறகு ஏற்பட்டதுதான். 1961 ஆண்டிற்கு பிறகு 2022 வரைக்கான காலகட்டத்திற்கு தாவா சொத்து தொடர்பாக எனது அம்மா பெயரில் பட்டா, குடிநீர் கட்டணம் போன்ற எந்த ஆவணங்களும் என்னிடம் கிடையாது என்றால் என்னிடம் கிடையாது, அம்மாவிடம் உள்ளது. 1961 ல் என் அம்மா பெயரில் ஏற்பட்டதாக

சொல்லும் வா.சா.ஆ. 3 மற்றும் 4 ஆவணங்களை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். அந்த ஆவணத்தின் படி எத்தனை சொத்துக்கள் அம்மா பெயரில் எழுதப்பட்டது என்றால் 7 சொத்துக்கள் எழுதப்பட்டது. இந்த வழக்கில் 4 ஆம் பிரதிவாதி சாந்தி புஷ்பவல்லி எனது சகோதரி என்றால் சரிதான். அந்த 4 ஆம் பிரதிவாதி பெயரில் வா.சா.ஆ. 3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள வடசேரி கிராமம் சர்வே எண். 107 ல் அமைந்துள்ள ஒரு சொத்தினை வா.சா.ஆ. 6 ஆவணத்தின்படி எனது அப்பா 20.01.2005 அன்று எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. 1961 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து வேறு, இந்த சொத்து அதன் அருகே அமைந்துள்ள மற்றொரு சொத்து. அது எனது பெரியப்பாவிற்கு சொந்தமாக இருந்து, அவர் 1969 ல் எனது அப்பாவிற்கு எழுதி வைத்தது. அந்த சொத்தை வா.சா.ஆ. 6 ன் படி 4 ஆம் பிரதிவாதிக்கு எனது அப்பா எழுதி வைத்தார். அந்த இரண்டு சொத்துக்களும் ஒரே சொத்து என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 6 ல் எனது அம்மா சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ. 6 ல் கண்டுள்ள சொத்தில் எனது அம்மாவிற்கு உரிமையில்லாததால்தான் அதில் சாட்சிகையொப்பம் செய்துள்ளாரா என்றால் ஆமாம். வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள என் அம்மா பெயருக்கு எழுதி வைக்கப்பட்டுள்ள ஆவணத்தில் நிபந்தனைகள் நிறைய உள்ளது என்றால் சரிதான். அந்த நிபந்தனைகளின்படி எனது அம்மா தன் வாழ்நாளில் அந்த சொத்துக்கள் மீது தனிப்பட்ட முறையில் கடன் எதுவும்

பெறமுடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே கால கட்டத்தில் வா.சா.ஆ. 3 ஆவணத்திற்கு முன்பும் பின்பும் என் அப்பா நிறைய சொத்துக்களை விற்றுள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அதைபற்றி என் அம்மா எனக்கு சொல்லவில்லையா என்றால் சொல்லவில்லை. 25.07.2008 ல் எனக்கு வயது என்ன என்றால் 45 வயது. மேற்படி தேதியில் எனது அப்பாவும், எனது உறவினர் நீலம்மாளும் சேர்ந்து ஒரு சொத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ. 7 ஆவணத்தின்படி கேபிரியல் ஜேம்ஸ் பெர்னண்டோ என்பவருக்கு ஒரு சொத்து விற்றுள்ளார்கள் என்றால் தற்போது சாட்சி தெரியும் என்றும், அதை விற்றுதான் வாதிக்கு வள்ளியூரில் 3 ½ ஏக்கர் நிலம் வாங்கி கொடுத்தார்கள் என்றும் கூறுகிறார். அந்த ஆவணத்தில் நான்தான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த நேரத்திலும் நான் குன்னூரில்தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். இந்த ஆவணத்திற்காகதான் நான் இங்கு அப்போது வந்தேன் என்றால் சரியல்ல. நான் கம்பெனி வைத்து நடத்தி வருகிறேன். அடிக்கடி வந்து போவேன். அப்போதும் வந்தேன். பி.வா.சா.ஆ. 7 ன் படி விற்ற சொத்தை எனக்காகதான் எனது அப்பா விற்றார் என்றாலும் அந்த விற்பனை தொகையை நான்தான் எடுத்துக் கொண்டேன் என்றாலும் சரியல்ல. மேற்படி பணத்தை அன்றைய தேதியில் எனது கணவர் பெஞ்சமின் பால் டேனியல் பெயரில் ஊட்டியில் உள்ள SBT வங்கி கணக்கு எண். 57020957817 ற்கு மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1961 தேதியிட்ட வா.சா.ஆ. 3 ஆவணத்தில்

சொல்லப்பட்டுள்ள 7 சொத்துக்களில் வழக்கு சொத்தை தவிர 5 சொத்துக்களை என் அப்பா அதன்பிறகு அவர் வாழ்நாள் காலத்தில் தனிப்பட்ட முறையில் விற்றுள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வா.சா.ஆ. 3 ஆவணத்தின் படி என் அம்மாவிற்கு அந்த சொத்துக்களில் உரிமை எதுவும் இல்லாததால்தான் எனது அப்பா தனிப்பட்ட முறையில் விற்றுள்ளார் என்றால் சரியல்ல. என் அம்மாவும், அப்பாவும் சேர்ந்து முடிவு எடுத்துதான் எது செய்தாலும் சேர்ந்துதான் செய்வார்கள். அவ்வாறு என் அப்பா அந்த சொத்துக்களை விற்றதை பற்றி எனது அம்மாவிற்கு அப்போதே தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு என் அப்பா விற்ற சொத்துக்கள் குறித்தான பல கிரய ஆவணங்களில் என் அம்மா சாட்சி கையொப்பமும் செய்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தின் மொத்த மதிப்பு எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த ஆவணத்தில் சொத்துக்களுக்கு தனிப்பட்ட முறையில் மதிப்பு குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 3 ஆவணத்தில் எங்கே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்று கேட்டால் சாட்சி அந்த ஆவணத்தை பார்த்துவிட்டு புரியவில்லை என கூறுகிறார். மேற்படி ஆவணத்தில் அந்த சொத்தில் எனது அப்பாவிற்கு அந்த சொத்தின் மீது பல வகை கடன்களும், ஒத்திகளும் உள்ளதாக குறிப்பிடப்பட்டள்ளது என்றால் சரிதான். என் அப்பா வாழ்நாளில் அந்த கடன்களையும், ஒத்திகளையும் எனது அப்பா தீர்க்கவில்லை என்றால் எனது அம்மாதான் தீர்க்க வேண்டும் என்ற நிபந்தனை அந்த ஆவணத்தில் உள்ளது

என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் என் தந்தை காலத்திற்கு பின் என் அம்மா சர்வ சுதந்திரமாக எடுத்துக் கொள்ள வேண்டியது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில்தான் எனது அம்மா எனக்கு எழுதி வைத்தார். எனக்கு என் அம்மா பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தை எழுதி வைக்கும்போது அவர் என்னுடன்தான் குன்னூரில் வசித்து வந்தார் என்றால் சரிதான். நான்தான் அந்த ஆவணத்திற்கான செலவுகளையும் பார்த்துக் கொண்டேன் என்றால் சரிதான். நான் என் அம்மாவை என்னுடன் அழைத்து சென்று, அவர்களை மதிமயக்கி, வற்புறுத்தி பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிக்கு என் அப்பா எழுதி கொடுத்த உயில் ஆவணத்தில் எனது அம்மாதான் சாட்சி கையொப்பம் செய்தார் என்றால் என் அம்மா அவரை மிரட்டி கூட்டி சென்றதாகவும், அதில் என்ன எழுதியுள்ளது என்று அப்பா, அம்மாவிடம் வாதி காட்டவில்லை என்றும் என்னிடம் கூறினார். அவ்வாறு மிரட்டி கூட்டி சென்றிருந்தால் என் அம்மாவிடமிருந்து சொத்தை வாதி எழுதி வாங்கியிருக்கலாம் என்றாலும் சாட்சி கையொப்பம் மட்டும் பெற்றிருக்கலாம் என்றாலும் சரியல்ல. அவ்வாறு என் அம்மாவை மிரட்டி கையொப்பம் பெற்றார்கள் என்ற விவரம் எனக்கு எப்போது முதலில் தெரியும் என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் எனது அம்மாவிற்கே அப்படி ஒரு ஆவணம் இருந்தது தெரியும், அப்போதுதான் எனக்கும் தெரியும். 2009 ல் மிரட்டி ரெஜிஸ்டர் ஆபில் போய் சாட்சி கையொப்பத்தை வாங்கினார்கள் என்ற விவரத்தை என் அம்மா அதற்குபிறகு இந்த வழக்கு தாக்கல் செய்தவரையில் சொல்லவில்லையா

என்றால் சொன்னார். ஆனால் அது உயில் ஆவணம் என்று அவருக்குதெரியாது. எதோ ஒரு ஆவணத்தில் சொத்து விற்பதற்காக வாதி கையொப்பம் பெறுகிறார் என நினைத்துக்கொண்டார். அவ்வாறு சொன்னபிறகு அது என்ன ஆவணம் என்று நான் சார் பதிவாளர் அலுவலகம் சென்று விசாரிக்கவில்லையா என்றால் விசாரிக்கவில்லை. வா.சா.2 அழகப்பனை தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்திற்கு அருகே குடியிருக்கிறார். என் அப்பா என் அம்மாவிற்கு எழுதிய வா.சா.ஆ. 3 ஆவணம் நிறைய நிபந்தனைகள் கூடிய ஆவணம் என்றாலும் அதனால் அது உயில் ஆவணம்தான், செற்றில்மெண்ட் ஆவணம் இல்லை என்றாலும் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருந்த காலம் வரையில் வா.சா.ஆ. 3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள எந்த சொத்திற்கும் என் அம்மா பெயரில் வருவாய் ஆவணங்களோ, வேறு எந்த ஆவணங்களோ ஏற்படுத்தப்படவில்லை என்றாலும் அவை என் அப்பா பெயரில்தான் இருந்தது என்றாலும் சரிதான். அவருடைய காலத்திற்கு பிறகுதான் அம்மா பெயரில் மாற்றப்பட்டது. என் அம்மாவிற்கு என் அப்பாவின் காலத்திற்குபிறகுதான் அந்த சொத்துக்கள் சேர வேண்டும் என்பதால் அப்பா காலத்திற்கு பிறகுதான் அவை மாற்றப்பட்டன என்றால் சரியல்ல. அதனால் தான் என் அப்பா மட்டுமே அந்த சொத்துக்களை வா.சா.ஆ. 3 ஆவணத்திற்கு பிறகும் விற்பனை செய்தார் என்றும் அதில் என் அம்மா சாட்சி கையொப்பம் செய்தார் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ. 3 ஆவணம் உயில் ஆவணம்தான் என்றாலும் அதனால்தான் அவர் வாதிக்கு அதன்பிறகு வா.சா.ஆ. 9 செற்றில்மெண்ட்

ஆவணத்தை எழுதிவைத்தார் என்றாலும் அதனால் அதன்பிறகு என் அம்மா என் பெயருக்கு எழுதி வைத்த வா.சா.ஆ. 25 ஆவணம் எழுதி வைக்க என் அம்மாவிற்கு உரிமை கிடையாது என்றாலும் அதனால் அந்த ஆவணம் செல்லாது என்றாலும் சரியல்ல. வாதியின் சொத்தை அபகரிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலி ஆவணங்களை வழக்கிற்கு பின்னிட்டு உருவாக்கியுள்ளோம் என்றாலும் அவை ஏற்றுகொள்ளதக்கதல்ல என்றாலும் சரியல்ல. வாதியின் வழக்கு அனுமதிக்கப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

.